ISSN:2582-9599

# மருத்துவர் சு. நரேந்திரனின் மருத்துவக் கலைச்சொற்கள்

முனைவர் இரா. தனலெட்சுமி,
உதவிப் பேராசிரியர், இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010.

57

**ஆய்வுச்சுருக்கம்**

காலத்திற்கேற்றவாறு சொல்லாக்கம், தொடராக்கம் தமிழில் நடந்து வந்துள்ள சொல்நெறியை அறியமுடிகிறது. தொல்காப்பியர் காலந்தொட்டு சொல்லாக்கம் தமிழ்மொழியில் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் சொல்தூய்மை காப்பாற்றப்பட்டுள்ளது. பண்டையத்தமிழர் அதனை கண்ணும் கருத்துமாகப் பேணினர். அயல்நாட்டிலிருந்து வந்த பொருள்களுக்கெல்லாம் உடனுக்குடன் தூய தமிழ்ச் சொற்களையே புனைந்தனர். தொல்காப்பியர் கிரேக்கச் சொல்லான ‘ஹோரா’ என்பதை ‘ஓரை’ என்று தமிழாக்கம் செய்தார். அவர் பயன்படுத்திய சொற்களுக்கு பின்வந்தோர் புதுச்சொல் படைத்து உலகமொழி ஆய்வுடன் ஒன்றுபட்டு செல்கின்றனர். எழுத்து என்பதை ‘ஒலியன்’ என்றும், சொல் என்பதை ‘உருபன்’ என்றும், போலியை ‘மாற்றொலியன்’ என்றும் புதுப்புது கலைச்சொற்களாக தொல்காப்பியருக்குப் பின்வந்த மொழியிலாளர் உருவாக்கினார். அறிவியல் தமிழ் நம் மொழிக்கு புதிது என்பதால் நம் மொழியில் இல்லாத சொற்களைப் பிற மொழியிலிருந்து பெற்று நமது மொழிக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தமிழில் அறிவியல் கலைச் சொற்களைப் பொறுத்தமட்டில், கடந்த பத்தாண்டுகளில் வெளியான இதழ்கள், பல்கலைக்கழகங்கள் இதுவரை நடத்தியுள்ள அறிவியல் கருத்தங்க மாநாட்டுக்கட்டுரைகள், அறிவியல் களஞ்சியங்கள், அறிஞர்களின் அறிவியல் நூல்களில் இடம்பெறும் கலைச்சொற்களை எல்லாம் ஒரு சேரத் திரட்டுதல், அவற்றை முறையே பகுத்தல், தரப்படுத்துதல் அவற்றை நடைமுறைப் படுத்துதல் என்று கலைச்சொல்லாக்கப் பணி என்பது ஒரு நீண்ட, நெடிய பணியாகும். அப்படியொரு சவாலாக எடுத்துக்கொண்டு “மருத்துவப் பணிங்கிறது மக்களோட மனசுக்கு நெருக்கமா நின்னு செய்ய வேண்டிய பணி” என்று தன் எழுத்துப் பங்களிப்புக்காகவும், மருத்துவ ஆய்வுக்காகவும் ஏராளமான அங்கீகாரங்களைப் பெற்றவர் மருத்துவர் சு.நரேந்திரன் அவர்கள். அவரின் மருத்துவப்பணி பற்றியும், அவர் மருத்துவத் துறைக்கென்று தொகுக்கப்பட்ட கலைச்சொற்கள் பற்றியும் திறம்பட எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள் :** மருத்துவம், அகராதி, கலைச்சொல்லாக்கம், துறைச்சொல், அறிவியல், ஒலிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு, தமிழ்ச்சொல், எழுத்துப் பணி, தமிழுணர்வு

**முன்னுரை**

மருத்துவ உலகில் மனித இனத்திற்காக தொண்டு செய்பவர்கள் கால ஓட்டத்தை வென்று வாழ்வர். மருத்துவர்களும் சமுதாயத்தின் ஓர் அங்கம். சமுதாயத்தின் முன்னோடியாக இருப்பவர்கள் தாய்மொழிப் பற்றாளர்களாக இருத்தல் வேண்டும். சோழ நாட்டு தஞ்சையம்பதியில் மருத்துவத் துறையும் சாதனை படைத்து வருவது மகிழ்வதற்குரியது. மேற்கத்திய ஆங்கில வழி மருத்துவத்தை, தமிழில் எழுச்சிமிக்க எழுத்தாற்றலால், பேச்சாற்றலால் தமிழகத்தின் தலைசிறந்த மருத்துவத்

தமிழறிஞர்களின் வரிசையில் மருத்துவர் சு. நரேந்திரனும் ஒருவர். இந்நூற்றாண்டில் புதுப்புது கண்டுபிடிப்புகளும் அறிவியல் உண்மைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மருத்துவர் சு.நரேந்திரன் அவர்கள் அறிவியலையும் மருத்துவத்தையும் மிக நுட்பமாக, எளியமையாக தாய்மொழியாகிய தமிழில் வெளிப்படுத்தியுள்ளார்.

**கலைச்சொல் - விளக்கம்**

‘கலைச்சொல்’ என்ற சொல்லிற்கு சென்னைப் பல்கலைக்கழக வெளியீடான ஆங்கில - தமிழ் அகராதி ‘terminology’ என்ற ஆங்கிலச் சொல்லைக் குறிப்பிடுகின்றது. இச்சொல்லிற்கு கலை இயல்களுக்குரிய துறைச்சொல் என்று இந்த அகராதி விளக்கம் தருகின்றது. க்ரியாவின் தற்காலத் தமிழகராதி, ஒவ்வொரு துறையிலும் வழங்கும் கோட்பாட்டுக்கான சொல் (பொதுவான பொருளில் வழங்காத) ‘துறை சிறப்புச்சொல்’ எனப் பொருள் தருகின்றது. இச்சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொல்லாக ‘Technical term’ என்பதை இவ்வகராதி குறிப்பிடுகின்றது. மேலும் வா. செ. குழந்தைசாமி தன்னுடை ‘அறிவியல் தமிழ்’ என்னும் நூலில் துறைச்சொல் என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார். துறை சார்ந்த சொற்களைக் குறிப்பதாக இச்சொல் அமைந்துள்ளது. எனினும் கலைச்சொல் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நன்கு அறிமுகமானச் சொல்லாகும். கணக்கு என்பது அனைவருக்கும் புரியும் பொதுச்சொல், கணிப்பொறி என்பது கலைச்சொல்.

**தமிழில் கலைச்சொல்லின் தோற்றம்**

ஊஸ்டரின் அறிவியல்பூர்வமான கோட்பாட்டு முறையில் கலைச்சொல்லாக்க நெறிகள் உலகிற்கு அறிமுகமாவதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே அதாவது 1831ஆம் ஆண்டு தமிழகத்திலிருந்து வெளிவந்த ‘தமிழ் மேகஸின்’ (Tamil Magazine) இதழில் அறிவியல் கட்டுரைகள் வெளிவந்தன. தமிழில் அறிவியலை எழுதும் முறையை,

1. மரபு சார்ந்த அறிவியலை எழுதும் முறை
2. ஐரோப்பிய அறிவியலை எழுதும் முறை

என இரு நிலையில் பிரிக்கப்படுகிறது.

தமிழகத்தில் வரலாற்றுக்காலம் முதல் நிலவிவந்த மரபு சார்ந்த அறிவியலைத் தமிழர்கள் பதிவு செய்ததற்கான சான்றுகளாகத் திகழ்பவை ஓலைச்சுவடிகளே. புராணங்கள், கதைகள், இலக்கிய இலக்கணங்கள் ஆகியன எழுதப்பெற்ற ஓலைச் சுவடிகளே பெருமளவில் கிடைத்துள்ளன. சித்த மருத்துவம், மரபுசார் வானியல், சோதிடவியல், கப்பல் கட்டும் தொழில்நுட்பம், வானமுறைகள் ஆகிய மரபு சார்ந்த தொழில்நுட்பத் துறைச் சுவடிகள் குறைவான எண்ணிக்கையிலையே கிடைத்துள்ளன. இச்சுவடிகளில் அறிவியல் கருத்துக்கள் மறைபொருளாகவும், நேரடியாகவும் பாடல் வடிவில் எழுதப்பட்டுள்ளன. இச்சுவடிகளில் உள்ள அறிவியல் சொற்களை மரபுசார் அறிவியல் கலைச்சொற்கள் எனலாம்.

**கலைச்சொல் – கோட்பாட்டிற்கான பொருளாய்வு**

| வ.எண்கள் | பயன்படுத்தியவர் | சொல் |
|---|---|---|
| 1. | சாமுவேல் ஃபிஷ்கிறீன் | அருஞ்சொல், பெயர் கட்டியிருப்பது |
| 2. | சுந்தரம் பிள்ளை | ாழி |
| 3. | பா.வே. மாணிக்கவேலு நாயக்கர் | அறிவியல் சொற்கள் |
| 4. | எஸ். வையாபுரிப் பிள்ளை | கலைச்சொல் |
| 5. | பலர் – விஞ்ஞானச் சொல் | சாஸ்திர பரிபாஷை |

**கலைச்சொல் தொகுப்பு**

அறிவியல் பல துறைகளில் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் இக்காலச்சூழலில், ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையா தேவையாய் இருப்பவை கலைச்சொற்களாகும். கலைச்சொற்களின்றி அறிவியலைத் தெளிவாக, எளிமையாக விளக்குதல் என்பது இயலாத ஒன்று. ஆகையால் கலைச் சொற்களை மிக விரைவாக உருவாக்க வேண்டிய கட்டாயச் சூழல் இன்று ஏற்பட்டுள்ளது. ஒருமொழியின் வளர்ச்சி என்பது அம்மொழியைப் பேசும் மக்களின் வளர்ச்சியைச் சார்ந்ததாகும். வளர்ந்து வரும் அறிவியல் உலகில் உலகநாடுகளின் வளர்ச்சிக்கு இணையாக தமிழ்மொழியைப் பேசும் மக்களும் வளர்ச்சிப்பெற வேண்டும்.

“அரிசியிற் கல்லைக் கலப்பது போல் வலிந்து அயல்மொழிச் சொற்களை அளவின்றிக் கலந்து முரசு முழங்குதானை மூவர்முன் விழைந்து முறையோடு போற்றிய முத்தமிழை நலிந்து-கொலை புரியாதிரையா - ஐயா தொலை புரியாதிரையா”- என்று புலவர் குழந்தை தமிழோடு பிறமொழிக்கலப்பை எடுத்துக்கூறுகிறார்.

ஓர் ஆங்கிலக் கலைச்சொல்லாக்கப்பட்ட வெவ்வேறு தமிழ்ச்சொற்கள் பல ஆங்கிலச் சொற்களை விளக்கும் ஒரே தமிழ்ச் சொல், ஒலிபெயர்ப்பில் காணப்படும் வேறுபாடுகள் என்னும் கூறுகளை கலைச்சொல்லாக்க முயற்சியில் ஈடுபடுத்துவதை கருத்தில் கொள்ள வேண்டும்.

**கலைச் சொல்லாக்கத்தின் கருப்பொருள்**

பல்வேறு அறிவுத்துறைகளிலும் பயன்படுத்தக்கூடிய சொற்களை ஒலிபெயர்ப்பு, சொல்லாக்கம் ஆகியவற்றின்வழி உருவாக்கலாம். ஒவ்வொரு மொழிக்கும் அதற்கென சில ஒலிகள் உள்ளன. எனவே, ஒரு மொழிக்குரிய சொற்கள் பிறிதொரு மொழியில் நுழையும்போது அம்மொழியில் இல்லாத புது ஒலிகள், ஓசை மாற்றங்களாக மட்டுமே நிலைக்கின்றன. சான்றாக, வடமொழி ஒலியான ‘ஜ’ என்பது தமிழ்மொழியில் இல்லை. இவ்வொலியுடைய வடசொற்கள் தமிழில் இடம்பெறும்போது ஓசை வேறுபாடுகளாகவே அமைந்துவிடுகின்றன.

**எ.கா**

| | |
|---|---|
| மேஜை | மேசை |
| பங்கஜம் | பங்கயம் |

மொழிபெயர்ப்பில் பொருத்தமான சொல் கிடைக்காதபோது அதனை ஒலிபெயர்க்கலாம். வோல்ட் (volt), வாட் (watt), LASER, NASA போன்ற சொற்கள் அந்தந்த பொருண்மையின் அடிப்படையில் முதலெழுத்துக்களால் உருவாக்கப்பட்டவை. இவற்றை மொழிபெயர்க்காமல்




ஒலிபெயர்த்தே பயன்படுத்த வேண்டும்.

“அறிவியல் கலைச்சொற்கள் பெரும்பாலும் துறை அறிஞர்களால் செய்யப்படுகின்றன. ஒருவர் கையாண்ட சொல் இன்னொருவருக்கு தெரியாமல் போவதாலும் அவர்களுடைய மொழியறிவும் மொழியுணர்வும் கருத்தமைவாக்கத்தில் மாறுபடுவதாலும் ஒரு மூலச்சொல்லுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் காணப்படுகின்றன. கலைச்சொற்கள் பல சிறப்பாக அமையவில்லை. எனவே அறிவியல் தமிழுக்கான எழுத்தாக்க முறைகள், சொல்லாக்க முறைகள், தரப்படுத்தும் முறைகள் ஆகியவற்றை வரையறுத்து பழைய கலைச்சொற்களை எல்லா நிலையிலும் தரப்படுத்தவும் தேவையான புதிய கலைச்சொற்களை உருவாக்க வழிகாட்டவும் வேண்டியுள்ளது” (நா. ஜானகி ராமன்-2003)

**மருத்துவத்தில் கலைச்சொல்லாக்கம்**

கலைச்சொல்லாக்கப் பணியின் வரலாற்றைக் கூர்ந்து கவனிக்கும்பொது சித்த மருத்துவத்தால் நமக்கு கிடைத்த கலைச்சொற்கள் குறைவு. ஆகையால் கலைச்சொற்களை ஒரு நிலையில் பக்தி இலக்கியங்களிலும் மற்றைய இலக்கிய நூல்களிலும் தேடவேண்டியதாக இருந்தது. ஆனால் மருத்துவம் பரவலாக்கப்பட்ட பின் அறிவியல், அரசியல் போக்கிற்கிணங்க காலத்திற்கு தகுந்தவாறு மொழியாக்கம் பெற்றுள்ளது.

அதன்பின்னர், மொழித்தூய்மை மட்டும் போதாது என்று அறிவியலாளர்களும், கலைச்சொல்லாக்க முயற்சியில் ஈடுபட்டவர்களும் உணர்ந்ததன் காரணமாகத் தற்பொழுது கருத்துச் செறிவும், இலக்கண நெகிழ்வும், பொருள் தெளிவும் கொண்ட கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன. எனினும் உலகமயமாக்கல் என்னும் போர்வையில் தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் ஆங்கிலம் கலந்த தமிழ் பேசும் “தங்கலீஸ்” காரணமாகவும், சில தினசரி இதழ்களும் கங்கணம் கட்டிக்கொண்டு ஆங்கில வார்த்தைகளையே மீண்டும் கொணர முயல்கின்றது எனலாம்.

எடுத்துக்கட்டாக, தொடக்கத்தில் OXYGEN ‘உயிர்வளி’ என்று கூறப்பட்டது. பின்னர் பிராணவாயுவாகி மறுபடியும் ஆக்சிஜனாகி உயர்வளி காற்றோடு கரைந்துவிட்டது.

**மருத்துவர் சு. நரேந்திரனின் மருத்துவக் கலைச்சொற்கள்**

சு.நரேந்திரன் இதுவரை இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவக் கலைச்சொற்களை வகைப்படுத்தித் தொகுத்திருக்கிறார்.

1. செரிமானப்பாதை அறுவை மருத்துவம்
2. பொது அறுவை மருத்துவம்

என இரண்டு தமிழ்வழி மருத்துவப் பாடநூல்களையும் எழுதியிருக்கிறார். தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ் வளர்ச்சிக் கழகத்தோடு இணைந்து பல மருத்துவக் களஞ்சியங்களை உருவாக்கியிருக்கிறார். எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும் வகையில் முப்பது மருத்துவ நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றுள்,

1. குடற்புண்ணைக் குணப்படுத்தலாம்
2. நோயை வெல்வோம்
3. 16 வியாதிகளும் அவற்றின் வைத்தியமும்

4. பெருங்குடல் வாய் திறப்பு

போன்ற நூல்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன.

**மருத்துவ கலைச்சொற்கள்**

**தமிழ் – ஆங்கிலம்**

1. அகலநாண் - Broad ligament
2. அசைவற்ற குடல் - Paralytic ileus
3. அடி உதரவிதாச் சீழ்க்கட்டி - Subpherenic abscess
4. அதிர்வலை மருத்துவம் - Eswl
5. அபாயம், இடர்ப்பாடு - Risk
6. அமிலம் - Acid
7. அமில எதிர்ப்பு மருந்து - Antacid
8. அமிலம் ஏற்கா - Acid fast
9. அமீபா – ஒட்டுண்ணி - Amoeba
10. அறிகுறி குறைவான - Sub acute

**ஆங்கிலம் - தமிழ்**

1. A bacterial - நுண்ணுயிரற்ற
2. Abdomen - வயிறு
3. Abdominal distension - வயிறு உப்புசம்
4. Abdominal pain - வயிற்று வலி
5. Abdominal wall - வயிற்றுச் சுவர்
6. Abnormalities - இயல்பு மாற்றம்
7. Abortion - கருக்கலைப்பு
8. Abrasion - தோற்காயம், சிராய்ப்பு
9. Abscess - சீழ்க்கட்டி
10. Absolute - தனி

**ஒலிபெயர்ப்புகள்**

1. அஷனர் – ஷெரின் - Ochsner – Sherren
2. ஆக்டினோ மைக்கோசிஸ் - Actinomycosis
3. ஆஞ்சிடோடிஸ்ப்லேஸியா - Angiodysplasia
4. ஆண்டிரம் - Antrum
5. ஆம்பிசிலின் - Ampicillin
6. இன்சுலினோமா - Insulinoma
7. இன்பெக்சியஸ் மோனோ

| | | |
|---|---|---|
| நியூக்ளியோசிஸ் | - | Infectious mono nucleosis |
| 8. எரித்தேரமைசின் | - | Erythromycin |
| 9. ஏஞ்சல்சிக் செயற்கை | - | Angelchic prosthesis |
| 10. க்ளோர்கியாசிஸ் | - | Clonorchiasis |

என்ற சொற்களின் பட்டியலால் மருத்துவரின் மருத்துவக் கலைச்சொல்லாக்கங்களை அறிய முடிகிறது.

**முடிவுரை**

“படிப்பது உலகை உங்களுக்கு அறிமுகப்படுத்தும்; படைப்பது உங்களை உலகுக்கு அறிமுகப்படுத்தும்” என்பார்கள். அந்த வகையில், மருத்துவ மாமணி சு.நரேந்திரன் படைத்த நூல்கள், அவரது மருத்துவ ஞானம், அறிவியல் தெளிவு, தாய்மொழிப்பற்று, இலக்கியப் புலமை, சமூக அக்கறை போன்ற அவரது பன்முக திறமைகளையும், படைப்பாக்கங்களையும் உலகுக்கு அறிமுகப்படுத்துகின்றன. மருத்துவக்கல்வியை தமிழில் கற்பிக்க வேண்டுமென்றும், எல்லா நிலைகளிலும் அதைப் பயிற்றுமொழியாக்க வேண்டுமென்றும் அயராது உழைத்து கொண்டிருப்பவர். பொதுமக்களுக்கு தினசரி வாழ்வில் விதவிதமான உடல் சீர்கேடுகள் ஏற்பட்டு மருத்துவரை நாடி வரும் பாமர மக்களிடம் கடினமான ஆங்கில சொற்களுக்கு பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்துகிறார். ‘எல்லா வளர்ந்த நாடுகளுமே கல்வியைத் தங்களோட தாய்மொழியில்தான் கொடுக்குது. தமிழகத்தில்தான் தாய்மொழியே படிக்காமல் ஒருவர் மருத்துவராகவோ, பொறியாளராகவோ, தொழில்நுட்ப வல்லுநராகவோ ஆக முடியும். வேறு எந்த நாட்டிலும் இது சாத்தியமே இல்லை. அறிவியலைத் தாய்மொழியில் படித்தால்தான் மாணவர்களால் முழுமையாக தெளிவாக உள்வாங்க முடியும்’ என்ற நோக்கத்திற்காக தமிழில் மருத்துவக் கலைச்சொற்களை உருவாக்கி தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் மகத்தான தொண்டு செய்து வருகிறார்.

**துணை நின்ற நூல்கள்**


1. டாக்டர் வா. செ. குழந்தைசாமி, அறிவியல் தமிழ், பாரதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை – 600 017, 2001.
2. இராதா செல்லப்பன், கலைச்சொல்லாக்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010, 1985.
3. இராதா செல்லப்பன், கலைச்சொல் உருவாக்கலும் தரப்படுத்தலும், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, 2008.
4. நரேந்திரன். சு, செரிமானப்பாதை அறுவை மருத்துவம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010, 2014.
5. சண்முகம். செ. வை, தமிழ்ச்சொல்லாக்க நெறிமுறைகள் ஒரு வரலாற்று அளவீடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010, 1985.
6. நரேந்திரன். சு, கலைச்சொல்லாக்கமும் வரலாறும் வளர்ச்சியும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010.
7. ஜானகிராமன். ந, அறிவியல் கலைச்சொல்லாக்கம், ராகவன் பதிப்பகம், விருத்தாசலம், 2003.
8. இரா. தனலெட்சுமி. இரா, சு. நரேந்திரனின் அறிவியல் தமிழ்ப் பணி, TISSL Publication, 1st street, Balaji Nagar, kabur, Trichy-19, மார்ச் – 2024.